1997 ஏப்ரல் 28]

703--

பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைத்தல்

*6086--**திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மதுராந்தகம் சர்க்கரை ஆலையின் கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கீழ்விளாகம் முதல் இடையாத்தூருக்கு பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்போதைக்கு மேற்சொன்ன பகுதியில் தரைப்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடையாத்தூர் கிராமத்தைச் சுற்றி ஆறுகள் இருக்கின்ற காரணத்தினால் அங்கே அதிகமாகக் கரும்பு பயிரிடப்படுகிறது. மதுராந்தகம் சர்க்கரை ஆலைக்கு கரும்பு வரவேண்டுமானால், 7, 8 கிலோ மீட்டர் தூரம் வேறு பாதையில் சுற்றி வரவேண்டிய நிலைமையிருக்கிறது. சுமார் 2 ஆயிரம் ஏக்கருக்கு மேல் கரும்பை அங்கே பயிர் செய்கிறார்கள். அதற்காகவாவது நம்முடைய அரசு இடையாத்தூருக்கும் கீழ்விளாகம் கிராமத்திற்குமிடையே--600 மீட்டர்தான் இருக்கிறது ஆற்றின் குறுக்களவு - அந்த இடத்திலே தரைப்பாலம் அமைத்தால் அந்த கிராம மக்கள் அதிகமாகக் கரும்பை உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக இருக்கின்ற அடிப்படையில் இந்த ஆண்டு இல்லையென்றாலும், அடுத்த ஆண்டாவது அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம், மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் ஒன்று அமைக்க 13-2-1997 அன்று ரூ. 189 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது பொன்விளைந்தகளத்தூரிலிருந்து படாளம் சர்க்கரை ஆலை வழியாக உதயம்பாக்கம் செல்கின்ற சாலை. ஆகவே, ரூ. 189 இலட்சம்

13-2-1997 அன்று அனுமதிக்கப்பட்டு, இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படுகிறது. உறுப்பினர் சொல்கின்ற அந்தப் பாலத்தை அமைக்க வேண்டுமானால் *25* இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அதை இந்த ஆண்டு எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பில்லை. அடுத்த ஆண்டு வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *704*, திரு. ஜி.பி. வெங்கிடு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

704--

விவசாயத்தை மேம்படுத்த கருத்தரங்கங்கள்

6289*--திரு. ஜி.பி. வெங்கிடு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் தொகுதியில் பாசன மற்றும் வேளாண்மைத் தொழில் நுட்பக் கருத்தரங்கங்கள் ஏற்பாடு செய்து, அதன் மூலம் விவசாயத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆவன செய்யப்படும்.

திரு. ஜி.பி. வெங்கிடு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோபிசெட்டிப்பாளையம் தொகுதி, கொடிபேரி பாசனத்திலும், பவானிசாகர் பாசனத்திலுமாக மேட்டுப்பாங்கான பூமியல்லாத தோட்டக்கால் பூமியோடு சேர்த்து 25 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பாசன வசதி பெற்ற தொகுதியாகும். இன்றைக்கு இருக்கின்ற விஞ்ஞான வளர்ச்சியில் பொறியியலின் மூலம் எத்தனையோ முன்னேற்றங்களைக் கண்டிருக்கிறோம். அந்த வகையில் அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்கு ஒரு கருத்தரங்கு நடத்தி, அவர்களுக்கு விளக்கம் தந்து, அங்கே வேளாண்மைத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS